மணிச்சுடர் 15/16.10.2012

## சிங்கப்பூரில்

# தகவல் தொழில் நுட்ப கலந்துரையாடல் நிகழ்ச்சி

## ஜமால் முகம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் ஏற்பாடு

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), எதிர் வரும் சனிக்கிழமை 20–10–2012 அன்று, மாலை 4.30 மணி முதல் 7 மணி வரை, "தகவல் தொழில்நுட்பக் கலந்துரை யாடல்" நிகழ்ச்சி ஒன்றை, EDUQUEST INTERNATIONAL INSTITUTE, 1 SOPHIA ROAD #07-13 PEACE CENTRE, SINGAPORE 228149 என்ற முகவரியில் ஏற்பாடு செய்திருக் கிறது.

அதி நவீன விஞ்ஞான வளர்ச்சி கண்டுவரும் கணினி யுகத்தில், சிங்கப்பூரில் மட்டு மின்றி உலக அரங்கத்தில் தகவல் தொழில்நுட்பத் துறை யில் உருவாகி வரும் மாறுதல் கள், வாய்ப்புகள் மற்றும் சவால்களைப் பற்றியும், அவை களை போட்டித்திறன்மிக்க யுக்திகள் கொண்டு எவ்வாறு எதிர்கொள்ளலாம்? என்பது பற்றியும் இக்கலந்துரையாடலில் விவாதிக்கப்படவிருக்கிறது.

இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ள விரும்புகிற வர்கள், 63981020 என்ற தொலைப்பேசி எண்ணிலும், contact@jmcalumni.org.sg என்ற மின்னஞ்சல் வாயிலாகவும் தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். அனுமதி இலவசம். முன்பதிவு அவசியம். குறைந்த இருக்கைகளே மீதமுள்ளன. இக்கலந்துரை யாடல் பற்றிய மேல் விபரங் களை, www.jmcalumni.org.sg என்ற முகவரியில் இணையத் தில் காணலாம்.